

# விகடன் ஜோக்ஸ் 300

விகடன் பிரசுரம்

# விகடன் ஜோக்ஸ் 300




விகடன்
பிரசுரம்

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை,
சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு
போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு
போன்: 044-42634283 / 84
e-mail: publications@vikatan.com



Title :
VIKATAN JOKES 300


© VIKATAN PIRASURAM


ISBN : 978-81-8476-262-4

விகடன் பிரசுரம்: **499**

*நூல் தலைப்பு:*
விகடன் ஜோக்ஸ் 300



*நூல் உரிமை:*
© விகடன் பிரசுரம்



*முதற்பதிப்பு :* **நவம்பர், 2009**

*விலை :* **ரூ. 85**

| | |
|---|---|
| *பதிப்பாளர்:* | பா.சீனிவாசன் |
| *ஆசிரியர்:* | வீயெஸ்வி |
| *பொறுப்பாசிரியர்கள்:* | பொன்ஸீ, செங்கோட்டை ஸ்ரீராம் |
| *உதவி ஆசிரியர்கள்:* | சா.இலாகுபாரதி, எம்.நாகமணி, கே.பாசுமணி, எஸ்.கோபால், சிவராஜ் |
| *தலைமை வடிவமைப்பு:* | மு.ராம்குமார் |
| *வடிவமைப்பு:* | அ.அன்பழகன், கா.மங்களேஸ்வரன், கோ.செந்தில் |



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

# ஓர் ஆறுதல் மருந்து!

எப்போதுமே ஜோக் புத்தகங்களை ஒரே மூச்சில் படித்து முடித்துவிட முடியும். புன்னகைத்துக் கொண்டே ஜாலியாக பக்கங்களைப் புரட்ட முடியும். அதுமட்டுமல்ல, மன அழுத்தம் ஏற்பட்டு சோர்ந்து உட்கார்ந்திருக்கும் வேளையில் ஜோக் புக் ஆறுதலான ஒரு மருந்து.

ஆரம்பகாலம் முதல் ஆனந்த விகடனில் வெளியாகிவரும் ஜோக்குகளை விரும்பிப் படிக்கும் வாசகர் வட்டம் மிகப் பெரியது. இன்று வரையில் அது தொடர்ந்து வருகிறது. விகடனில் வெளியான ஜோக்குகளைத் தொகுத்து அவ்வப்போது கையடக்க நூல்களாக வெளியிட்டு வருகிறது விகடன் பிரசுரம். அந்த வகையில், 2009-ம் ஆண்டில் விகடனில் வெளியான ஜோக்குகளில் 300-ஐ இந்த நூலில் தொகுத்திருக்கிறோம்.

இதில் உள்ள ஜோக்குகளை படிப்பதோடு உங்கள் சுற்றத்தாரிடமும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ளவும், பரிசு அளித்து மகிழவும் இந்த நூல் உங்களுக்கு உதவும்!

- ஆசிரியர்

## ஓர் ஆறுதல் மருந்து!

விகடன் ஜோக்ஸ் 300



“எத்தனை நாளைக்குத்தான் ஓடியே வர்றது. ஒரு சேஞ்சுக்காக மன்னர் ‘ஸ்கேட்டிங்’ல வர்றார்!”

- ஜி.எஸ்.பிரதீப்



"தலைவர் ரொம்ப மோசம்!"

"ஏன், என்ன ஆச்சு?"

"டிராஃபிக் ஜாம்னா, உடனே கார் மேலே ஏறி பேச ஆரம்பிச்சிடுறாரு!"

- பி.பாலாஜி கணேஷ்



"அந்த ரெண்டு பாடகர்களும் சகோதரர்களாம்!"

"அதுக்காக ஒருத்தருக்கு 'சங்கீத கலாநிதி, இன்னொருத்தருக்கு 'சங்கீத தயாநிதி'னு பட்டம் கொடுக்கணுமா?"

- தஞ்சை தாமு



‘‘தன்னோட மீட்டிங் கேட்க யாருமே வரலையேன்னு தலைவருக்கு ரொம்பக் கோபம்!’’

‘‘அதனால..?’’

‘‘கோர்ட்ல ‘ஆட்கொணர்வு’ மனு போட முடிவு பண்ணிட்டார்!’’

- எஸ்.பி.வளர்மதி



“தலைவரை இப்போதைக்குத் திருத்த முடியாதுங்கிறியே... அப்படி என்ன பண்ணாரு?”

“ஏ.டி.எம். சென்டருக்குள்ள பணம் எடுக்கப் போனவரு ‘ஜெயிலு மாதிரியே இருக்கு’னு சொல்லிக்கிட்டு வெளியே வரமாட்டேங்குறாரு!”

- சு.அ.ஆதித்யா



"தலைவர் தன்னைப் படிச்சவர்னு நிரூபிச்சுட்டாரா, எப்படி?"

"சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவர் இவர் பெயரைச் சொன்னதும், எழுந்து நின்னு 'உள்ளேன் ஐயா'னு சொன்னாரே!"

- விஜயநிர்மலன்



"தண்டோரா போடறவர் சுருட்டு பிடிச்சுக்கிட்டே பேசறதால, என்ன சொல்றாருன்னே புரியலை!"

"பொதுஇடங்கள்ல புகை பிடிச்சா, அபராதம்னு ராஜா சொல்லி இருக்காராம்!"

- வெ.சீதாராமன்



“மகாராணி! கஜானா காலி என்பதால், மன்னர் கொடுக்கும் ‘செக்’குகள் வேகமாகத் திரும்பிவிடுகின்றன!”

“க்கும்! ‘செக்’ விஷயத்திலும் அவர் செல்லாக்காசுதானா?”

- எஸ்.சங்கர்



''காந்திக்கு 13 வயசுல திருமணம் ஆச்சு. நேருவுக்கு 14 வயதாகும்போதும் பாரதியாருக்கு 7 வயதாகும்போதும் கல்யாணம் ஆச்சு!''

''இப்பதானே தெரியுது நம்ம பேர் ஏன் வரலாற்றில் இடம் பெறலைன்னு!''

- கருப்பம்புலம் சித்திரவேலு



"டாக்டர்! சுவரெல்லாம் எதுக்குக் கவர்ச்சி நடிகைகள் படங்களா ஒட்டி வெச்சிருக்கீங்க?"

"பேஷன்ட்டுங்க வாயைத் திறக்கச் சொல்லி ரொம்ப அலுத்துப்போச்சு!"

- எம்.சரவணன்



"மொத்தம் பத்து நாளைக்கு நீங்க இந்த மருந்தைச் சாப்பிட்டா போதும்!"

"அதுக்கப்புறம்?"

"இந்த மருந்து மொத்தமா உங்களைச் சாப்பிட்டுடும்!"

\- லெ.நா.சிவகுமார்



"திருடுவியா... திருடுவியானு கேட்டு போலீஸ் ஸ்டேஷன்ல அடி பின்னிட்டாங்க!"

"அப்புறம்?"

"திருடுறேன்னு சொன்ன பிறகுதான் அடிக்கிறதை நிறுத்தினாங்க!"

- ஆர்.சுப்பு



"கொடுத்த டாக்டர் பட்டத்தைத் தலைவர் ஏன் வேண்டாம்னு சொல்லிட்டார்?"

"அவர் மேல ஏகப்பட்ட கேஸ் இருக்குறதால அவருக்கு வக்கீல் பட்டம்தான் வேணுமாம்!"

- வி.சாரதிடேச்சு



"ஏன் உன் மனைவியைக் கொலை செஞ்சே?"

"அவதான் சுமங்கலியா சாகணும்னு ஆசைப்பட்டா!"

- எஸ்.முகம்மது யூசுப்



“மேனேஜர் சார்... ஆபரேஷன் தியேட்டர் கட்டணும்... லோன் கிடைக்குமா? எத்தனை லட்சம் கிடைக்கும்?”

“சும்மா உயிரை வாங்காதீங்க டாக்டர்!”

- லெ.நா.சிவகுமார்



“தலைவரே! எதிர்க் கட்சியில ஒரு ஓட்டுக்கு ஆயிரம் ரூபா தர்றாங்க!”

“அது உனக்கு எப்படித் தெரியும்?”

“இதோ பாருங்க... ஆயிரம் ரூபா வாங்கிட்டு வந்திருக்கேன்!”

- ஓரியூர் கே.சேகர்



"பயப்படாதீங்க! ஆபரேஷன் தியேட்டர்ல எங்க டாக்டர் யூஸ் பண்றதெல்லாம் டிஸ்போஸபிள்தான்!"

"பேஷன்ட்டையும் சேர்த்துதான்னு சொல்லுங்க!"

- எஸ்.முகம்மது யூசுப்



"உன் பேர் என்ன? ஏன் ராஜாவைக் கொலை செஞ்சே? குற்றத்தை ஒப்புக்கிறியா?"

"இப்படித்தான் ராஜாவும் தொணதொணன்னு கேள்வி கேட்டுக்கிட்டே இருந்தான்!"

\- சி.பி.செந்தில்குமார்



"நீங்க ஆபரேஷன் பண்ணின பேஷன்ட் பொழைச்சுட்டார் டாக்டர்!"

"எங்கே தப்பு நடந்துச்சுன்னு எனக்கு உடனே தெரிஞ்சாகணும்!"

- தே.ராஜாசிங் ஜெயக்குமார்



"நமது மன்னருக்கு கிரிக்கெட் பைத்தியம் அதிகமாகிவிட்டது என்று எப்படிக் கூறுகிறாய்?"

"விக்கிரமசிம்ம பாண்டியன் என்ற தன் பெயரை 'விக்கி பான்டிங்' என்று மாற்றிக்கொண்டு இருக்கிறாரே!"

- எஸ்.ஞானப்பிரான்



"அவர் ஒரு நட்சத்திர எழுத்தாளரா? அவர் பேரை நான் கேள்விப்பட்டதே இல்லியே!"

"நமீதா, நயன்தாரா, ஸ்ரேயான்னு சினிமா நட்சத்திரங்களைப் பத்தி கிசுகிசு எழுதுவார்!"

- எஸ்.கோபாலன்



"மன்னரும் இளவரசரும் ஒரே நேரத்தில் அந்தப்புரத்தில் புகுந்துவிட்டார்களா, பின்பு எப்படிச் சமாளித்தார்கள்?"

"மன்னர் 'மைனாவைத் தேடி வந்தேன்' என்றார். இளவரசர் 'நைனாவைத் தேடி வந்தேன்' என்றார்!"

- நீலன்



"தலைவரே! மானம் போச்சு, மரியாதை போச்சு, கௌரவம் போச்சு..."

"நிறுத்துய்யா, ஒண்ணும் இல்லாததுக்கெல்லாம் எதுக்குய்யா இப்படிக்கத்துறீர்?"

- புதூர் பாலா



"வாழ்க்கையில ரொம்ப அடிபட்டுட்டேன் சார்!"

"சரி விடுங்க! மனைவி அமையறதெல்லாம் நம்ம கையிலா இருக்கு?"

- தே.ராஜாசிங் ஜெயக்குமார்



"டாக்டர்! எங்க தாத்தாவுக்கு நீங்க செஞ்ச ஆபரேஷன் ஃபெயிலியர் ஆனதுக்கு என்ன காரணம்?"

"காரணத்தை விசாரிக்கற நேரமாய்யா இது? சட்டுபுட்டுனு காரியத்துக்கு ஏற்பாடு பண்ணு!"

- லெ.நா.சிவகுமார்



''உங்களுக்கு நிறைய பணம் கிடைக்கப் போவுது!''

''அப்ப நம்ம தொகுதிக்கும் இடைத்தேர்தல் வரப்போகுதா ஜோசியரே?''

- ராம் ஆதிநாராயணன்



"டேய், அப்பா பார்க்கிற பெண்ணைத்தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்!"

"அட போம்மா! நம்ம வேலைக்காரியைத்தான் அவர் எந்நேரமும் பார்க்குறாரு!"

- க.கலைவாணன்



"எங்கப்பாவுக்கு டை அடிக்கலாம்னு பார்த்தால்... முடியலை!"

"ஏன், காசு இல்லியா?"

"அட, சுத்தமா முடி இல்லீங்க!"

- எஸ்.மோகன்



“நான் சொல்வதெல்லாம் உண்மை உண்மையைத்தவிர வேறெதுவுமில்லை!”

“ஐயோ தலைவரே! இது கோர்ட் கிடையாது, விழா மேடை. நீங்க வெளியிடுறது உங்க சுயசரிதை!”

- கொளக்குடி சரவணன்



"உங்க படம் கலக்கோ கலக்குன்னு கலக்கிருச்சு!"

"ரொம்பப் புகழாதீங்க!"

"நான் சொன்னது, தயாரிப்பாளரோட வயித்தை!"

- அ.பேச்சியப்பன்



நடிகை: "எனக்குக் கல்யாணம் ஆயிடுச்சுன்னு சொன்னா யாரும் நம்பவே மாட்டேங்குறாங்க!"

நிருபர்: "பேரன், பேத்தி இருக்கிறதா சொல்லிப் பாருங்க. நம்புவாங்க!"

- நாகலட்சுமி கருணாநிதி



''என்னது... தன்னம்பிக்கை கவிதைதான் உன்னை பிக்பாக்கெட் அடிக்கத் தூண்டியதா... என்ன கவிதை?''

''வெறுங்கை என்பது மூடத்தனம்... விரல்கள் பத்தும் மூலதனம்!''

- தஞ்சை தாமு



"பொண்ணு உடம்புல ஏன் ரிப்பன் சுத்தறாங்க?"

"மாப்பிள்ளை அரசியல்வாதி ஆச்சே, ரிப்பனை வெட்டிதான் முதலிரவைத் தொடங்குவாராம்!"

- அ.ரியாஸ்



"தலைவர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போறாராமே?"

"அதையெல்லாம் சீரியஸா எடுத்துக்கிட்டு, மலர்வளையம் வாங்கிட்டு வந்திருக்கிறது கொஞ்சம்கூட நல்லால்ல!"

- எஸ்.மோகன்



"குக்கர் வாங்கினப்ப ஒரு வருஷத்துக்கு ஒண்ணும் ஆகாதுனு கேரன்டி கார்டு கொடுத்தீங்க. ஆனா, மூணு மாசத்திலயே ரிப்பேர் ஆகிடுச்சே!"

"நாங்க ஒண்ணும் ஆகாதுன்னு சொன்னது கேரன்டி கார்டுக்கு!"

- எஸ்.கே.எம்.பி.வெங்கட்




“அதோ போறானே அவன்... பொங்கலுக்குக் கரும்பு, தீபாவளிக்குப் பட்டாசுனு சீஸனுக்கு ஏத்த வியாபாரம் செய்வான்!”

“இப்ப என்ன பண்றான்?”

“இடைத்தேர்தல் சமயத்துல வீச்சரிவாள் வித்து காசு அள்ளிட்டான்!”

- தஞ்சை தாமு




"சோடியம் குளோரைடு தின்னவன் $H_2O$ குடிச்சே ஆகணும்!"

"என்ன மாஸ்டர் சொல்றீங்க?"

"டான்ஸ் ஆடும்போது உங்க ரெண்டு பேருக்கும் இடையே கெமிஸ்ட்ரியே இல்லைனு சொல்றேன்!"

- க.கலைவாணன்



"போர்க்களத்திலிருத்து ஓடிவந்த மன்னர் அ ஆ இ ஈ என்று சொல்லிக்கொண்டு இருக்கிறாரே, ஏன்?"

"எதிரி மன்னன் சரியான பாடம் கற்பித்துவிட்டானாம்!"

- வைகை ஆறுமுகம்



"மன்னா! போருக்குப் படைகள் எல்லாம் தயார்!"

"பிறகென்ன... புறப்பட்டுச் செல்ல வேண்டியதுதானே. இதையெல்லாம் என்னிடம் வந்து சொல்லிக்கொண்டு..."

- ஜெ.மாணிக்கவாசகம்



"அந்த நடிகை 'புது டிரெண்ட்' உருவாக்கிட்டாங்களாமே?"

"ஆமாம்! குபீர்னு வயித்தை ஊத வெச்சுக்கிட்டு வந்து, இதான் 'செக்ஸ் பேக்'னு சொல்றாங்க!"

- ராசா தேசிங்கு



"போலீஸ் தொப்பி டிசைன்ல வாட்டர் டேங்க் இருக்கே... யார் வீடு இது?"

"இந்த ஏரியா ரௌடியோட வீடு!"

- பி.பாலாஜி கணேஷ்



"ஜட்ஜ் அவர்களே! குற்றவாளிக் கூண்டில் நிற்கும் இவன், ஒரே இரவில் நான்கு வீட்டில் கொள்ளை அடித்திருக்கிறான்!"

"வாவ்! எனர்ஜி லெவெல்... பிரமாதம்!"


- ரிச்சு



"உங்க வீட்டு நாய் தினமும் எங்க நியூஸ் பேப்பரைத் தூக்கிட்டுப் போயிடுது!"

"ஓசியில பேப்பர் படிக்கிறார்னு எம் புருஷனை இப்படி மரியாதைக் குறைவா பேசுறது நல்லாயில்ல!"

- ரெங்கை பழனி



"இங்கு போட்டியிடும் வேட்பாளர்களிலேயே நான்தான் ரொம்பவும் வயதானவன். எனக்கு நிறைய நோய்களும் இருக்கின்றன. எனவே, என்னை வெற்றி பெறச் செய்தால், நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இடைத்தேர்தல் விரைவில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!"



"நம்ம எம்.எல்.ஏ. 'இசட்' பிரிவு பாதுகாப்புக் கேட்கிறாரே, ஏன்?"

"உடனடியா இடைத்தேர்தல் வரணும்னு எல்லோரும் வெறியோட அலையுறாங்களாம்!"

- தஞ்சை தாமு



"இந்தப் படத்துல பாடல்கள் எல்லாம் பெருசா பேசப்படும்!"
"ஏங்க... பாடப்படாதா?"

- தஞ்சை தாமு



"ஷாக் அடிக்கும்னு தெரிஞ்சும் கரன்ட்டுல போய் ஏன் கையை வெச்சீங்க?"

"கட்டை விரல்தானே... கரன்ட் பாஸ் ஆகாதுனு நெனச்சிட்டேன்!"

- மு.ராஜசேகரன்



"கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக, மகளிர் அணியில ரெண்டு பேரை நம்ம தலைவர் நீக்கிட்டாராம்ல?"

"தலைவர் சைட் அடிக்கிறப்ப பதிலுக்கு எந்த ரியாக்ஷனும் காட்டலியாம்!"

- அம்பை தேவா



"நம்ம வேலைக்காரி மூணு மாசமாம்!"

"அதெப்படி... நம்ம வீட்டுல வேலைக்குச் சேர்ந்து ரெண்டு மாசம்தானே ஆவுது?"

- அம்பை தேவா



"என்னைத் தவிர எந்த நாயாவது உன்னைப் பெண் பார்க்க வந்திருக்குமா?"

"ஏன் வரலை? உங்கம்மாவும் உங்கப்பாவும் வந்தாங்களே?"

- ஓரியூர் கே.சேகர்



"டாக்டர்! இந்த ஆபரேஷன்ல நான் பிழைச்சுடுவேனா?"

"ஓவரா ஜோக்ஸ் படிச்சிட்டு, அசடு மாதிரி பேசாதீங்க. இது கண் ஆபரேஷன்.... பார்வை மட்டும்தான் பறிபோகும்!"

- க.கலைவாணன்



"டாக்டர்! டாஸ் போடறீங்களே... 'தலை' விழுந்தா..?"
"பேஷன்ட் தலை விழுந்துடும்!"
" 'பூ' விழுந்தா?"
"பேஷன்ட் படத்துக்கு பூ போட்டுட வேண்டியிருக்கும்!"

- ரிஷிவந்தியா



"என் கனவில் அசின் வந்தாங்க!"

"ஆஹா! அப்புறம்?"

"அடுத்தாப்புல அமீர்கான் வந்து செமத்தியா மிரட்டிட்டுப் போயிட்டாரு!"

- பாளை பசும்பொன்



"நான் தயாரிக்கிற பல்பொடிக்கு நல்ல பேரு ஒண்ணு சொல்லுங்களேன்!"

"துலக்கப் போவது யாரு?"

- லட்சுமி ஆவுடைநாயகம்




"ரேஷன் கடை வெளியே என்ன தள்ளுமுள்ளு நடக்குது?"

"உள்ளே ஏதோ தில்லுமுல்லு நடக்குதாம்!"

- பாலாஜி கணேஷ்



"என் மருமக, நான் எள் என்றால் எண்ணெயாய் இருப்பாள்!"

"அப்படியா!"

"ஆமாம்! எனக்கு உடம்பு முடியலைனு சொன்னதும் சட்டுனு அவ சுருண்டு படுத்துடுவா!"

லதா. வி.



"டார்லிங்! என்னை அந்த முறுக்கு விக்கிறவனும் சுண்டல் விற்கிறவனும் ரொம்ப நேரமா குறுகுறுன்னு பாக்குறாங்க!"

"அவங்க வேற யாரும் இல்லை... என்னோட அப்பாவும் தம்பியும்தான். வீட்டுக்கு வரப்போற மருமகளை ஆர்வமா பார்க்குறாங்க!"

- தஞ்சை வளர்மதி



"ஏன்டி! ஆர்குட்ல உனக்கு நிறைய ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்களாமே?"

"ஆமா! ஆனா, அதுலே யார் 'குட்'னுதான் தெரியலை!"

- தஞ்சை தாமு



"பீச்சுல என் லவ்வரை எங்க அம்மா பார்த்துட்டாங்க. அங்கேயே முந்தானையைப் பிடிச்சு சண்டை போட ஆரம்பிச்சுட்டாங்க!"

"வெரிகுட்! மருமகளா ஆக்கிக்கச் சம்மதம் தெரிவிச்சுட்டாங்கனு சொல்லு!"

- வி.சகிதா முருகன்



"டாக்டர்! நீங்க அலோபதியா? ஹோமியோபதியா?"
"ஆ... ஆ... எனக்கே தெரியலையேப்பா!"

- ரிஷிவந்தியா



"கஞ்சா விலை படிப்படியா குறைஞ்சுகிட்டே வர்றதா பேப்பர்ல போட்டிருக்காங்களே!"

"நீங்களும் உங்க கண் பார்வையும்... நல்லா பாருங்க தலைவரே, அது கஞ்சா இல்லை... 'கச்சா' விலை!"

- எஸ்.சங்கர்



"மூணு வருஷமா நீங்க தொகுதிப் பக்கமே போறது இல்லை. ஆனா, மக்களுக்கு நன்மை செய்யறதா சொல்றீங்களே, எப்படி?"

"இனிமே, எங்க மூஞ்சியிலயே முழிக்கக் கூடாதுன்னு சொல்லித்தானே ஜனங்க எனக்கு ஓட்டுப் போட்டாங்க!"

- அதிரை புகாரி



"ரகசிய டைவர்ஸ் வேணும்னு கேட்குறீங்களே, ஏன்?"
"நான் பண்ணியிருக்கறது ரகசியக் கல்யாணமாச்சே!"

- மன்னன்




"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதானே இன்டர்வெல் விட்டாங்க. திரும்பவும் ஏன் இன்டர்வெல் விடறாங்க?"

"தியேட்டர் கேன்டீன்ல பாப்கார்னும், முட்டை போண்டாவும் மீந்துடுச்சாம்!"


- ராம் ஆதிநாராயணன்



"தரகரே, பொண்ணுக்கு ஏற்கெனவே கல்யாணமாகி, ஒரு குழந்தையும் இருக்குதாமே. அதை ஏன் எங்களிடம் மறைச்சீங்க?"

"நான் மறைக்கலம்மா... பொண்ணு சிம்ரன் மாதிரின்னு அப்பவே தெளிவா சொன்னேனே!"

- எம் அசோக்ராஜா



"அஞ்சு நிமிஷம் லேட்டா வந்திருந்தா, உங்க மாமியாரைக் காப்பாத்தியிருக்கலாம்!"

"எமன்கிட்டேயிருந்தா டாக்டர்?"

"உங்ககிட்டயிருந்து!"

- வி.ஆர்.சங்கர்




"நம்ம தலைவர் சரியான பத்தாம்பசலின்னு எப்படிச் சொல்றே?"

"ஓட்ஸ் சாப்பிட்டா நிறையா ஓட்டுக்கள் கிடைக்குமான்னு கேட்கிறாரே!"

- ரிஷிவந்தியா



''நம்ம தலைவரைப் பாம்பு கடிச்சிடுச்சு!''

''ஐயையோ... அப்புறம்?''

''வாயில் நுரை தள்ளி பாம்புக்கு உயிர் போயிடுச்சு!''

- மன்னன்



"லாண்டரி கடைக்காரர் படம் தயாரிக்கிறாரா, என்ன படம்?"
"அயர்ன்!"

- கே.பி.கிருஷ்ணகுமார்



“ரெண்டாங் கிளாஸ் படிக்கிற அந்தப் பையன் அமைச்சரோட மகனாம்!”

“அதுக்காக, மார்க் குறைச்சுப் போட்ட வாத்தியார் உருவ பொம்மையையா எரிக்கிறது!”

- சொக்கம்பட்டி தேவதாசன்



"நான் உங்களைக் காதலிக்கிற விஷயத்தை, எங்க அப்பாகிட்ட சொன்னா என்னைக் கொன்னே போட்டுருவார்!"

"அப்படியா... அப்போ சீக்கிரம் சொல்லிடு!"

- வீ.விஷ்ணுகுமார்



''என் பையனுக்கு ஆரிய பவன், ஆனந்த பவன், வசந்த பவன்னு எல்லா ஹோட்டல்லயும் அக்கவுன்ட் இருக்கு!''

''சரிதான்... பேய்த் தீனி தின்'பவன்' போலிருக்கு!''

- தஞ்சை தாமு




"எதுக்காக அந்த பேங்க் திவாலாகப் போகுதுன்னு பொய் சொல்லி இந்த ராத்திரியில இவ்வளவு கூட்டத்தைச் சேர்த்தே?"

"ராத்திரியில தனியா போய் ஏ.டி.எம்-ல பணம் எடுக்கப் பயமாயிருந்துச்சு!"

- வெ.கிருஷ்ணன்



"பார்மஸில வேலைக்குப் போனது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"சம்பளத்தைக் கேட்டு தலையைச் சொறிஞ்ச உடனே பேன் மருந்து கொடுத்துட்டாரு!"

- உஷா சாரதி



''ஹலோ! நான்தான் சம்பந்தம் பேசறேன்!''

''ஸாரிங்க! இது ராங் நம்பர். சம்பந்தமில்லாம பேசாதீங்க!''

- பி.பாலாஜி கணேஷ்



“வீட்டுக்குப் போனதும் என் அம்மாவுக்கு ஐஸ் வாட்டர் கொடுப்பேன்!”

“ஏன் டியர்?”

“வெளியே போன பொண்ணு இன்னும் வரலியேனு மடியில் நெருப்பைக் கட்டிக்கிட்டு இருப்பாங்களே!”

- எஸ்.மோகன்



"எங்க வீட்டுப் பூட்டை உடைச்சு ஒரு லட்சம் ரூபாயைத் திருடிட்டுப் போய்ட்டாங்க இன்ஸ்பெக்டர்!"

"ஆச்சர்யமா இருக்கு. பூட்டுக்குள்ளயா ஒரு லட்ச ரூபா வெச்சிருந்தீங்க!"

- பி.பாலாஜி கணேஷ்



"பக்கத்து வீட்டுப் பொண்ணைப் பாரு, அவள் எல்லாவற்றிலும் 90 சதவிகிதம் மார்க் வாங்கி இருக்கா!"

"போங்கப்பா, நான் அவளைப் பார்த்ததாலதான் ஃபெயில் ஆயிட்டேன்!"

- எம்.ஜோதிகா



"சந்தோஷத்துல பெரிய சந்தோஷமே அடுத்தவங்களைச் சந்தோஷப்படுத்திப் பார்க்கறதுதாங்க!"

"இது தெரிஞ்சுமா மேடை ஏறிப் பாடறீங்க?"

- ஜெ.மாணிக்கவாசகம்



"நம்ம தலைவரு தண்ணி அடிச்சு மயங்கி விழறது சகஜம்யா!"
"அட, இன்னிக்கு அண்ணி அடிச்சு மயங்கி விழுந்துட்டாரு!"

- கு.வின்செண்ட்



“ஆபரேஷனை நினைச்சு எதுக்கு இப்படிப் பயப்படறீங்க? பயப்படாம இருங்க. டாக்டர் இருக்கார் இல்லே... காப்பாத்திடுவார்!”

“அட, ஏன் சார் நீங்க வேற... எதுக்குத் தேவை இல்லாம பேஷன்ட் மனசுல வீண் ஆசையை வளர்க்கறீங்க?”

- கே.ஆனந்தன்




"அந்த ஆஸ்பத்திரி டாக்டர் புதுமை விரும்பின்னு எப்படிச் சொல்றீங்க?"

"சர்க்கரை நோயாளிகள் இருக்கிற வார்டுக்கு 'இனிப்பகம்'னு பேரு வெச்சிருக்காரே!"

- லட்சுமி ஆவுடைநாயகம்



"பர்ஸ்ல எதுக்கு உங்க அம்மா போட்டோவை வெச்சிருக்கீங்க?"
"அப்பதானே என் மனைவி பர்ஸையே தொடமாட்டா!"

- வி.சாரதிடேச்சு



"விழா அமைப்பாளரைத் தலைவர் ஏன் உதைக்கிறாரு?"

"தமிழ்த்தாய் வாழ்த்து ஏழே கால்... வரவேற்புரை ஏழு இருபது... தலைவர் ஏழரைன்னு நிகழ்ச்சி நிரல் படிச்சாராம்!"

- தஞ்சை தாமு




"யோவ் என்னய்யா! என்னை வரவேற்கும் பேனர்ல 'தன்மான டைனோசரே வருக'ன்னு போட்டிருக்கீங்க?"

"தன்மான சிங்கமேனு போட்டுப் போட்டுப் போரடிக்குது தலைவா!"

- வீ.விஷ்ணுகுமார்



"தலைவருக்குப் பொதுஅறிவு கம்மியா இருக்கலாம்... அதுக்காக இப்படியா பண்ணுவார்?"

"ஏன், என்ன பண்ணிட்டார்?"

"தமிழில் பெயர் வைக்காத புயலை இனிமேல் தமிழ்நாட்டில் வீச அனுமதிக்க மாட்டோம்னு அறிக்கை விட்டிருக்காரே!"

- கே.சி.கோவிந்தராஜன்



"உங்களுக்குதான் ஓட்டு கிடையாதுன்னு சொன்னோமே... அப்புறமும் எதுக்கு நின்னுக்கிட்டே இருக்கீங்க?"

"கை நீட்டிப் பணம் வாங்கிட்டேன்... ஒரு கள்ள ஓட்டாவது போட்டுட்டுப் போயிடுறேனே?"

- ஓரியூர் கே.சேகர்



"ஏன்டா, ஊரைச் சுத்திக் கடன் வாங்கிக்கிட்டிருக்கே?"

"விவரம் இல்லாம பேசுறியேப்பா... உட்கார்ந்துக்கிட்டே இருந்தா நம்மளைத் தேடி வந்தா கடன் குடுப்பாங்க? நாமதான் ஊரைச் சுத்திக் கடன் வாங்கணும்!"

- கே.சி.கோவிந்தராஜன்



"வேலை குறைவாயிட்டதால உங்களை வேலையிலிருந்து நீக்குறேன்."

"வேலை குறைவாயிட்டா, வேலை செய்திட்டிருந்தவங்களை நீக்குங்க சார். நான் எப்பவும் சும்மாதானே இருக்கேன். என்னை ஏன் நீக்குறீங்க?"

- நா.கோகிலன்



“சார்! இந்த ஊதுபத்தியை வாங்கிக்குங்க... வாசனை உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்!”

“ஸாரிப்பா... நான் இளங்கோவன் கோஷ்டி!”

- ம.விருதுராஜா



"ஜட்ஜ் ஐயா, ஒரு சந்தேகம்!"

"கேளு!"

"வக்கீல் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்பிக்கிறோம். ஆனா, எங்ககிட்ட சத்தியப்பிரமாணம் வாங்குறீங்க. வக்கீல்கள்கிட்ட வாங்குறதில்லையே, ஏன்?"

- சி.நாச்சிமுத்து



"நம்ம குமரேசனுக்குச் சின்ன வயசுல தீராத தொண்டை வலி இருந்திருக்கும்னு நினைக்கிறேன்."

"எப்படிச் சொல்றே?"

"சின்ன வயசுல ஒரு கவளம் சோறு திங்கவே ரொம்ப கஷ்டப்பட்டேன்னு சொன்னாரே, அதை வெச்சுத்தான்!"

- கில்பர்ட் ஜோபர்



"தலைவா! நீ எழுந்தால் சுனாமி. நடந்தாலோ..."

"கவிஞரே! உமக்கெல்லாம் துளிக்கூட மனச்சாட்சி இல்லையா... தேர்தலில் டெபாசிட் இழந்தவனுக்கு இந்தக் கவிதை தேவைதானா?"

- புதூர் பாலா



''புருஷன் பொஞ்சாதி பிரச்னையில மூணாவது ஆள் தலையிடுறது எனக்குச் சுத்தமா புடிக்காது!''

''அப்புறம் பிரச்னையை எப்படித் தீர்ப்பீங்க?''

''என்னோட 'நாலாவது' ஆளை வெச்சுத்தான்!''

- வி.சகிதா முருகன்



"'அகிலம் போற்றும் அரசே' என்று புலவர் பாடுகிறாரே, ராஜா அப்படி என்ன சாதிச்சிட்டாரு?"

"நீங்கள் வேறு... அகிலம் என்பது நம்ம சேடிப் பெண்ணின் பெயர்!"

- சி.பி.செந்தில்குமார்



''என்னங்க! எனக்கு இன்றைய ராசி பலன்ல 'கணவர் மீது அன்பு செலுத்துவீர்'னு போட்டிருக்குங்க!''

''இருக்காதா பின்னே... எனக்கு இன்னிக்கு சம்பள நாளாச்சே!''

- கொளக்குடி சரவணன்



"தலைவர் ஜெயில்ல இருந்து வந்ததும் புத்தகம் எழுதுறாராமே, என்ன தலைப்பு வெச்சிருக்கார்?"

"அது ஒரு களிகாலம்!"

- எஸ்.கே.எம்.பி.வெங்கட்



"தைரியமா உன் சம்சாரம் எதிரிலேயே குடிக்கிறியே... எப்படி?"

"அவகிட்ட காசு குடுத்து சைடு டிஷ் வாங்கறதா இருந்தா, ஒண்ணும் சொல்ல மாட்டா!"

- அம்பை தேவா



"ஆபாசமான படம்னு தெரியாம குடும்பத்தோட போயிட்டேன்!"

"அடடே! அப்புறம்?"

"பசங்களெல்லாம் என்னை வெளியே போகச் சொல்லிட்டாங்க!"

- போளூர் சி.ரகுபதி



"பத்தாம் நம்பர் பேஷன்ட்டை அடிக்கடி திட்டிட்டு வர்றீங்களாமே... ஏன்?"

"நீங்கதானே டாக்டர்... ஒரு மணி நேரத்துக்கு ஒரு தரம் அவருக்கு ஒரு டோஸ் தரணும்னீங்க!"

- போளூர் சி.ரகுபதி



''தலைவரைப் புத்தகக் கண்காட்சிக்குக் கூட்டிட்டுப் போனது தப்பா, ஏன்?''

''அங்கே போய் செக் புக் இருக்கானு கேட்கிறாரு!''

- பா.ஜெயக்குமார்



"'இலவசமா இருக்க இடம், இலவச உடை, வேளா வேளைக்கு இலவச சாப்பாடு' இப்படியெல்லாம் நான் எதுவும் அறிவிக்கவே இல்லியே?"

"இதெல்லாம் உங்களுக்குத் தலைவா... போலீஸ் உங்களைக் கைது பண்ண வந்துக்கிட்டிருக்கு!"

- எம்.ஆர்.மூர்த்தி



"தலைவர் நடத்துறது குடும்ப அரசியல்தான், இல்லேங்கல... அதுக்காக இப்படியா அவர் குடும்பத்தோடு இருக்கிற மாதிரி சிலை வைக்கிறது!"

- சொக்கம்பட்டி 'தேவதாசன்



"புதுமுகத்தைப் போட்டதால ஜெயிலுக்கு வந்துட்டீங்களா, ஏன்?"

"ரூபாய் நோட்டுல காந்திக்குப் பதிலா வேற ஒருத்தரைப் போட்டு அச்சடிச்சேன், அதான்!"

- ம.ஜான் பீட்டர்



"என்ன டாக்டர்... முன்னால சொன்னதைவிட அதிகமா ஃபீஸ் கேட்குறீங்க?"

"அடிபட்ட இடத்துல தையலுக்குப் பதிலா எம்ப்ராய்டரி டிசைன் பண்ணியிருக்கேன்!"

- கொளக்குடி சரவணன்



'''அமைச்சர்கள் ராஜினாமா என்பது ஒரு நாடகம்'னு தலைவர்கிட்ட சொன்னேன்..!''

''என்ன சொன்னாரு?''

''எந்த சபாவுல நடக்குதுங்கறாரு?''

- தஞ்சை அனார்கலி



“‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இலவச அவல் திட்டம் கொண்டுவருவோம்’னு தலைவர் சொல்றாரே, ஏன்?”

“நாட்டில் நிறையப் பேர் வெறும் வாயை மெல்லுறாங்களே... அதான்!”

- அதிரை புகாரி



"இத்தனை வயசிலும் அந்தக் கட்சித் தலைவர் கிழங்கு மாதிரி இருக்காரே!"

"அதான், நம்ம தலைவர் அவரோடு 'கூட்டு' வைக்கத் துடிக்கிறாரா?"

- தஞ்சை அனார்கலி



"தூங்கும்போது மணிக்கணக்கா செல்போன் பேசுற மாதிரி கனவு வருது டாக்டர்!"

"அதனால என்ன?"

"விடிஞ்சதும் என் செல்லுல பேலன்ஸே இல்லாமப் போயிடுதே!"

- பிரியதர்ஷன்



"தேர்தல் ஆணையத்துல வேலை பார்க்கிறவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு!"

"ஏன், என்னாச்சு?"

"முதலிரவை மூணு கட்டங்களா நடத்தப் போறாராம்!"

- வி.அங்கப்பன்



“வாக்காளர் பட்டியல்ல கூடுதலா பல ஆயிரம் மக்கள் சேர்ந்திருக்காங்களாமே?”

“அடடா! அவங்களுக்குக் கொடுக்கறதுக்கு இன்னும் பல கோடிகள் நம்ம கையைக் கடிக்குமோ?!”

- லெ.நா.சிவகுமார்



"பக்கிரிகிட்டே ஸ்கேன் எடுத்துக்கோன்னு சொன்னீங்களா டாக்டர்!"

"ஏன்... என்னாச்சு?"

"ஸ்கேன் மெஷினையே எடுத்துட்டுப் போயிட்டான்!"


- ரிஷிவந்தியா



''ஆச்சர்யமா இருக்கே... என் மேடைப் பேச்சை லைவ்வா ஒளிபரப்பவா இத்தனை டி.வி. சேனல்கள் வந்திருக்கு?''

''ஆமா, ஆனா எல்லாமே காமெடி சேனல்கள் தலைவரே!''

- அம்பை தேவா



"எங்க தலைவர் பேச ஆரம்பிச்சுட்டா கூட்டம் கூடிடும்!"

"அப்புறம் எந்த வழியா தப்பிச்சு ஓடுவாரு?"

- ஜெ.மாணிக்கவாசகம்



"ஆபீஸ்ல தூங்குற உங்களை எழுப்பறதுக்குன்னே ஒரு ஆளைப் போடணும் போல இருக்கே!"

"பேப்பர்ல 'ஆட்கள் தேவை'ன்னு விளம்பரம் கொடுக்கட்டுமா சார்?"

- வி.சாரதிடேச்சு



"சிஸ்டர், ஏழாம் நம்பர் பெட்டை ரெடி பண்ணுங்க!"

"பேஷன்ட் யாரும் வரலியே டாக்டர்?"

"தெரியும்! நான் ரெஸ்ட் எடுக்கறதுக்கு ரெடி பண்ணச் சொன்னேன்!"

- கொளக்குடி சரவணன்



"இனிமே நமக்குள்ளே எது நடந்தாலும் வெளியே தெரியக் கூடாது!"

"பெரிசா சொல்றீங்க... ஆனா, நான் அடிக்கும்போது நாலு ஊருக்குக் கேட்கிற மாதிரி கத்தறீங்களே?"

- பி.பாலாஜி கணேஷ்



''டாக்டர் இருக்காருங்களா?''

'''ரவுண்ட்ஸ்'ல இருக்கார்!''

''அப்படியா! தெளிஞ்சதும் வர்றேன்!''

- எஸ்.பழனிவேல்



"தலைவர் பல விஷயங்களைக் கரைச்சுக் குடிச்சவரா?"

"இல்லை! பல விஷயங்களைக் குடிச்சுக் கரைச்சவர்!"


- வீ.விஷ்ணுகுமார்



'''என் மேல எதிர்க்கட்சிக்காரங்க அழுகின முட்டை வீசினதுக்குச் சந்தோஷப்படறேன்'னு சொல்றீங்களே தலைவரே, ஏன்?''

''பின்னே, ஆசிட் முட்டை வீசியிருந்தா என் நிலைமை என்னாகறது?''

- கே.சஞ்சீவிபாரதி



''ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டுபோன பிறகுதான், அந்த ஆளு போலி டாக்டர்னு தெரிஞ்சுது!''

''எப்படி?''

''அனஸ்தீஷியாவுக்குப் பதிலா, ஒரு ஆஃப் விஸ்கி வாங்கித் தந்து ராவா குடிக்கச் சொன்னாரே!''

- அதிரை புகாரி



"என்னது! நமீதாவை ரேஷன் கடை வைக்கச் சொல்லணுமா?"
"ஆமா... அவங்கதானே எடையைக் குறைக்கமாட்டாங்க!"

- சிவம்



"இந்த நோயைக் குணப்படுத்தவே முடியாது!"

"அப்படி என்ன நோய் டாக்டர்?"

"அதுதெரிஞ்சா நான் குணப்படுத்திட மாட்டேனா?"

- சிவம்



"ஓட்டுக்காக ஜனங்களுக்குப் பணம் கொடுக்கறோம்தான்... அதுக்காக அவங்களப் போயி கூலிப்படைன்னு சொல்றதெல்லாம் ரொம்ப அநியாயம் தலைவரே!"

- ஜெ.மாணிக்கவாசகம்



''உனக்கு எம்.பி. சீட்டெல்லாம் கிடைக்காது. வேணும்னா, அவரைத் திட்டறதுக்கான 'அர்ச்சனை சீட்டு' வேணா தரட்டா?''

- ஜெ.மாணிக்கவாசகம்



"அரசியாரே! முதுகு தெரியும்படி இளவரசி உடை அணிய உடனே தடை விதியுங்கள்!"

"ஏன் அமைச்சரே?"

"அப்பாவும் புறமுதுகு காட்டுகிறார்... மகளும் புறமுதுகு காட்டுகிறார் என்று மக்கள் கேலி பேசுகிறார்கள்!"

- வந்தை ஜி.கே.நிதி



"எங்க தொகுதி எம்.பி-க்கு மக்கள் கஷ்டப்படறதைப் பார்த்துட்டு சும்மா இருக்க முடியாது!"

"என்ன பண்ணுவார்?"

"வெளிநாட்டுக்கு டூர் போயிடுவார்!"

- ஜி.கே.நிதி



"தேர்தல் நேரத்தில் எவரேனும் வன்முறையை ஏவிவிட்டால், பதிலுக்கு நாங்கள் காவல் துறையையும் வக்கீல்களையும் துணைக்கு அழைத்துக்கொள்வோம் என்று கடுமையாக எச்சரிக்கிறேன்!"

\- வியாஸ்



"தேர்தலை மையமாக வைத்து ஜோக் எழுதுபவர்கள், தாங்கள் பெறும் சன்மானத்தில் ஒரு பகுதியை எங்களுக்குத் தேர்தல் நிதியாக வழங்க வேண்டும்!"

- வியாஸ்



"டாக்டர், நீங்க தெய்வம் மாதிரி!"
"என்ன... பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க?"
"'தெய்வம் நின்று கொல்லும்'னு சொல்லுவாங்கள்ல, அதான்!"

- இரா.ரமேஷ் பாபு



''என்னது... லஞ்சம் கொடுத்தே நடுத்தெருவுக்கு வந்தீங்களா?''
''ஆமா, டிராஃபிக் போலீஸ் வேலைக்கு!''

- அ.ராதா



''ரொம்ப நேரமா நியூஸ் படிச்சா இந்த கதிதான் வரும்!''
''ஏன், என்ன ஆச்சு?''
'''மீண்டும் களைப்புச் செய்திகள்'னு சொல்றாங்க!''

- புதூர் பாலா



"இவ்வளவு பெரிய உண்டியல் வைத்து வசூல் செய்வதைச் சிலர் தப்பாகப் பேசலாம். இந்த நிதியையெல்லாம் மக்களுக்குத்தான் கொடுக்கப்போகிறேன். புரியவில்லையா? ஓட்டுக்கு ஆயிரம் வீதம் மக்களுக்கே திருப்பிக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்!"

- ஒரியூர் கே.சேகர்



"பல கட்சிகளில் இருந்த அனுபவத்துல நம்ம தலைவர் புதுசா கட்சி ஆரம்பிச்சிருக்கலாம்! அதுக்காக 'அனைத்திந்திய பாட்டாளி திராவிட மறுமலர்ச்சி முன்னேற்ற விடுதலை சோஷலிச ஜனதா காங்கிரஸ்'னு கட்சிக்கு பேர் வெச்சிருக்கிறது டூமச்!"

- சகுபுத்ரா



"வாரிசு அரசியலை எதிர்க்கும் எனது போராட்டம், எனக்குப் பிறகு என் மகனும், பேரனும், கொள்ளுப்பேரன் வழியாகவும் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்!"

- புதூர் பாலா



"நான் தனியா கட்சி ஆரம்பிச்சிருக்கேன்!"

"எத்தனை ஆயிரம் பேர் சேர்ந்திருக்காங்க?"

"அதான், தனியா கட்சி ஆரம்பிச்சிருக்கேன்னு முதல்லேயே சொன்னேனே!"

- ஜி.கே.நிதி



"ஏய் மிஸ்டர்! பின் ஸீட்லேர்ந்துமுன்னால இருக்கிற என் காலை ஏன் நெருடறீங்க?"

"இன்கமிங் கால் மேடம்!"

"அந்தக் காலை இப்ப நான் கட் பண்றேன்!"

- லாவண்யா



"அவர் போலி டாக்டர்னு எப்படிக் கண்டுபிடிச்சே?"

" 'நீங்க அலோபதியா, ஹோமியோபதியா'னு கேட்டதுக்கு, 'அலோ பாதி, ஹோமியோ பாதி'னு சொல்றாரே!"

- சி.நாச்சிமுத்து



''ஆபரேஷன் முடிஞ்சதும் என்ன பண்ணுவீங்க டாக்டர்?''
''அனுதாபப்படுவோம்!''

- பெ.பாண்டியன்



''அடேங்கப்பா, அந்தக் கட்சிக்காரங்களை இனி யாராலும் மிஞ்ச முடியாது...''

''என்ன பண்ணாங்க?''

''வாக்காளர் ஒவ்வொருத்தருக்கும் ஏ.டி.எம். அட்டையே வாங்கிக் கொடுத்துட்டாங்கன்னா பாரேன்!''

- சு.அ.ஆதித்யா



"இந்த ஹோட்டல்ல யார் சாப்பிட்டாலும் அதோ போறாரே அவர்தான் பில் கொடுப்பார்!"

"அவ்வளவு தாராளமா?"

"இல்லை. அவர்தான் இந்த ஹோட்டல் சர்வர்!"

- கே.ஆனந்தன்



"டாக்டர் பட்டம் கொடுத்தும் தலைவர் ஏன் சோகமாயிருக்கிறார்?"

"டாக்டர் பட்டத்துக்குப் பதிலா லாயர் பட்டம் கொடுத்திருந்தாலாவது முன்ஜாமீன் எடுக்க வசதியாயிருக்குமாம்!"

- பொ.மாரிமுத்துக்குமார்



"என்ன இது... நாற்பது வயசுப் பொம்பளயை எனக்கு ஹீரோயினா போட்டிருக்கீங்க?"

"நான்தான் சொன்னேனே... இந்தப் படத்துல நீங்க ஆன்ட்டி ஹீரோன்னு!"

- அம்பை தேவா



"கபாலிக்கு அந்தக் கட்சியில ஸீட்டு கொடுத்து இருக்காங்களாமே?"

"கபாலிதான் ஓட்டைப் பிரிக்கிறதுல கில்லாடி ஆச்சே!"

- தென்றல் சண்முகசுந்தரம்



"சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்ட தலைவர், திடீர்னு ஏன் பின்வாங்கிட்டார்?"

"ஆளாளுக்கு இரங்கல் கடிதம் அனுப்பிட்டாங்களாம்!"

- அ.பேச்சியப்பன்



"தலைவரே! யாரோ கணேசனாம். உங்க தொகுதியில இருந்துதான் பேசுறாராம். அவர் வீட்டுல 8 ஓட்டு இருக்காம். உங்களை நம்பி பல பேருகிட்ட கடன் வாங்கிட்டாராம். எப்போ பிரசாரத்துக்கு வருவீங்கன்னு கேட்குறார்!"

- ஓரியூர் கே.சேகர்



"நம்ம கட்சியில எனக்கு இந்தத் தடவை ஸீட்டு இல்லைனு சொல்லிட்டாங்க!"

"எதனால?"

"போன தடவை நீங்க எந்தத் தொகுதியில போட்டியிட்டீங்கன்னு கேட்டப்ப ஞாபகம் இல்லைன்னு சொல்லிட்டேன்!"

- பி.பாலாஜி கணேஷ்




"கராத்தே கிளாஸுக்குப் போன நம்ம தலைவரை ஏன் அரெஸ்ட் செஞ்சாங்க?"

"இப்பதான் ஆ... ஊ...ன்னாலே அரெஸ்ட் பண்ணிடுறாங்களே!"

- வி.அங்கப்பன்



''பிரசாரத்துக்குப் போன தலைவர் மயங்கி விழுந்துட்டார்!''

''அப்புறம் என்னாச்சு?''

''மயக்கம் தெளிஞ்சதும் 'இப்போ நம்ம கட்சி எந்தக் கூட்டணியில் இருக்குது'னு கேட்குறார்!''

- ஆனந்தகுமார்



"ஏங்க... சொர்க்கத்துல கணவன்-மனைவி சேர்ந்து இருக்க முடியாதாமே?"

"அதனாலதான்டி அது சொர்க்கம்!"

- அ.அப்துல் காதர்



"தலைவர் சுமாரா எவ்வளவு நேரம் பேசுவாரு?"
"எவ்வளவு நேரம் பேசினாலும் சுமாராத்தான் பேசுவாரு!"

- மா.கண்ணன்



"தலைவா! நீங்க சென்னை போக வேண்டாம். 40 ஸீட்ல 38 ஸீட் ஃபுல்லாயிருச்சாம்!"

"பாக்கி ரெண்டு ஸீட் இருக்குல்ல?"

"அதுல கண்டெக்டரும் டிரைவரும் உட்காருவாங்கள்ல!"

- தஞ்சை அனார்கலி



"என்ன திமிர் இருந்தா எங்கிட்டயே ஐ.டி. கார்டு கேட்பே?"

"கோவிச்சுக்காதீங்க ஏட்டய்யா! நேத்து ஒருத்தரோட தொப்பையைப் பார்த்து போலீஸ்னு நினைச்சு ஏமாந்து, மாமூல் கொடுத்துட்டேன்... அதான்!"

- கொளக்குடி சரவணன்



"அப்பா, காஷ்மீர் குல்லா, கறுப்புக் கண்ணாடியோடு இருக்காரே, இவர் யாருப்பா?"

"இவர்தான்டா எம்.ஜி.ஆர்!"

"ஓஹோ... சிவப்பு விஜயகாந்த்தா!"

- தஞ்சை தாமு



"தலைவர் ஏன் அவருக்குப் பிறக்கிற பசங்களுக்கெல்லாம் புலிகேசி, ராஜராஜ சோழன், மகேந்திரவர்மன்னு மன்னர்கள் பெயரையே வைக்கிறார்?"

"'கிங் மேக்கர்'னு பெயரெடுக்கணுமாம்!"

- சேலூர் எம்.ஏ.சந்திரசேகரன்



"என்ன... தலைவர் திடீர்னு 'தோல்வியைக் கண்டு எனக்குப் பயமே இல்லை'ங்கிறாரு!"

"பயத்துல அப்படி உளர்றாரு!"

- ஜெ.மா



"தலைவர் எதுக்குத் தேர்தல் அதிகாரிகிட்ட வாயை 'ஆ'ன்னு தொறந்து காட்றார்?"

" 'சொத்தை' காமிக்கணும்னு சொன்னதைத் தலைவர் தப்பா புரிஞ்சுக்கிட்டார்!"

- ஓரியூர் கே.சேகர்



"அந்த வேட்பாளரைத் தலைவர் கடுமையா திட்டிட்டாராமே... ஏன்?"

"எவ்வளவு செலவு செய்வேனு கேட்டதுக்கு, நீங்க எவ்வளவு கொடுத்தாலும் செலவு செய்வேன்னாராம்!"

- தென்றல் சண்முகசுந்தரம்



"எதற்கு 'போர்... போர்' என்று கத்தினாய் ராணி?"

"தங்களை அந்தப்புரத்திலிருந்து விரட்ட எனக்கு வேறு வழி தெரியவில்லை மன்னா!"

- ஓரியூர் கே.சேகர்



"டிக்கெட் வாங்காத ஒரு ஆள், திடீர்னு செக்கிங் வந்த உடனே ஓடுற பஸ்லேர்ந்து குதிச்சிட்டாரு!"

"அப்புறம் என்ன ஆச்சு?"

"அப்புறம் அவரு டிக்கெட் வாங்கிட்டாரு!"

- உஷா சாரதிடேச்சு



"அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே! பிரசார அசதியில் மேடையில் அமர்ந்தபடியே தூங்கிக்கொண்டு இருக்கும் தலைவர் அவர்களே..."

- சூரியன்



"'தலை'க்கு ரெண்டாயிரம் ரூபா கொடுத்தாதான் உங்களுக்கு நான் ஓட்டுப் போடுவேன்!"

"எனக்கு நீங்க ஓட்டுப் போட, நான் எதுக்குங்க அஜீத்துக்கு ரெண்டாயிரம் தரணும்?"

- வீ.விஷ்ணுகுமார்



"நான் அரசியலுக்கு வந்ததே ஒரு விபத்துதான்!"
"கொன்னுட்டீங்க போங்க!"

- ஜெ.மாணிக்கவாசகம்



"தலைவர் எதுக்கு அவரோட மெடிக்கல் ரிப்போர்ட்டை போஸ்டர் அடிச்சு ஒட்டச் சொல்றாரு!"

"அனுதாப ஓட்டாவது வாங்கலாமேன்னுதான்!"

- ஜெ.மாணிக்கவாசகம்



"தலைவரே! டாக்டர் சொல்லிட்டாரு, எலெக்ஷன் முடிஞ்சாதான் உங்களுக்குப் பேதி நிக்குமாம்!"

- ஜெ.மாணிக்கவாசகம்



''எதிரி மன்னனால் எனக்கு ஈடு கொடுக்க முடியவில்லை!''
''அடடே, அப்புறம்?''
''தோல்வியை ஒப்புக்கொண்டு துரத்துவதை நிறுத்திவிட்டான்!''

- சு.அருண்பிரகாஷ்



"மறக்காம வெங்காய சின்னத்துல ஓட்டு போடுங்க!"

"என்னய்யா அநியாயம் இது! பாத்ரூமுக்குள்ளெல்லாம் வந்து ஓட்டுக் கேட்குறீங்க!"

- அ.ரியாஸ்



"மக்கள் ஒரு துளி கண்ணீர் சிந்தக்கூடாது என்பதில் உறுதி கொண்டவன் நான். அதனால்தான், இந்த ஆண்டு நான்கைந்து படங்களுக்குக் கதை-வசனம் எழுதிய நான், ஒரு மெகா சீரியலுக்குக்கூட கதை எழுதவில்லை என்பதை இந்தத் தேர்தல் மேடையில் தெரிவித்துக்கொள்கிறேன்!"

- சோலை ஆதித்யா



"தனியாகவே நிற்பேன்னு சொல்லிட்டுத் தலைவர் ஏமாத்திட்டாரு!"

"எப்படி?"

"ஜீப்ல மனைவி, மச்சினன்னு குடும்பத்தோடு நிக்கிறாரே!"

- ராசாதேசிங்கு



“கபாலியையே நம்ம தலைவர் அசத்திட்டாராம்!”

“எப்படி?”

“ராத்திரி 12 மணிக்கு கபாலியோட வீட்டு ஓட்டைப் பிரிச்சு உள்ளே இறங்கிப்போய் ஓட்டுக் கேட்டாராம்!”

- வி.சகிதா முருகன்



''உங்கள் வீட்டுப் பிள்ளை ஓட்டுக் கேட்க வந்திருக்கேன்!''

''வந்துட்டியா... சரி, ஓடிப்போய் ஒரு லிட்டர் பால் வாங்கிட்டு வா பார்ப்போம்!''

- அ.ரியாஸ்



''பேஷன்ட் இப்ப எப்படி இருக்கார் சிஸ்டர்?''
''இன்னமும் எப்படி இருக்காருனு கேளுங்க டாக்டர்!''

- பெ.பாண்டியன்



"பிரசார வேன் இன்னும் ரெடியாகலையாம்!"



“நம்ம தலைவரைப் பத்தி செல்போன் கம்பெனிக்குத் தெரிஞ்சிருக்கும் போலிருக்கு!”

“எப்படிச் சொல்றே?”

“தலைவரை செல்லுல கூப்பிட்டா.... ‘நீங்கள் தொடர்பு கொள்ளும் பந்தாதாரர் பிஸியாக உள்ளார்’னு குரல் வருதே!”


- வீ.விஷ்ணுகுமார்




"தலைவர் ஏன் பேயறைஞ்ச மாதிரி இருக்கார்?"

"தேர்தல்ல அவருக்கு ஷூ சின்னம் ஒதுக்கி இருக்காங்களாம்!"

- பா.ஜெயக்குமார்



“நம்ம தலைவர் தினமும் ராத்திரியில பீச்சுக்குப் போறாரே, எதுக்கு?”

“அவருக்கு ஆதரவு அலை அடிக்குதானு பார்க்கப் போறாராம்!”

- சி.பி.செந்தில் குமார்



"ஸாரி சார்! நீங்க எலெக்ஷன்ல நிக்கறதுக்கெல்லாம் லோன் தர முடியாது!"

- ஜெ.மாணிக்கவாசகம்



"அந்த வேட்பாளரை ஏன் எல்லோரும் அடிக்கிறாங்க?"

"ஓட்டு போடுறதுக்குப் பணம் கொடுக்கறதுக்குப் பதிலா, அந்த பெண்கிட்ட அல்வாவும் மல்லிகைப்பூவும் கொடுத்தாராம்... அதான்!"

- சொக்கம்பட்டி தேவதாசன்



‘‘தலைவர் டி.வி. விளம்பரம் அதிகமா பார்ப்பாரு போலிருக்கு!’’

‘‘எப்படிச் சொல்றே?’’

‘‘‘இந்திய அரசியலில் முதன்முதலாகக் கட்சி ஆரம்பித்து, சில மாதங்களே ஆன புத்தம் புதிய எங்கள் கட்சிக்கு ஓட்டு போடுங்கள்’ என்கிறாரே!’’

- செல்வராஜா



''நம்ம தலைவர் ஏன் டென்ஷனா இருக்கார்?''

'''என் பேர்ல எந்தச் சொத்தும் இல்லை'னு தேர்தல் கமிஷனுக்கு அறிக்கை கொடுத்தார்ல... இப்ப பிச்சைக்காரங்க எல்லாம் அவரை 'வாங்க பிரதர்... நம்மகூட சேர்ந்துக்கலாம்'னு கூப்பிடுறாங்களாம்!''

- கண்ணா



"தலைவர் என்ன ரொம்ப கோபமா இருக்காரு?"

"தலைவர் ஓட்டு கேட்க ஒரு வீட்டுக்குள்ளே போகும்போது, உள்ளே இருந்தவங்க தலைவரைப் பார்த்ததும் 'திருடன் திருடன்'னு கத்திட்டாங்களாம்!"

- உஷா சாரதிடேச்சு



''நம்ம தலைவர் நாலாம் கிளாஸ் படிக்கிற தன் பையனைப் போட்டு ஏன் இப்படி அடிக்கிறார்?''

'''40-ல 40 போனா என்ன'ன்னு கேட்டானாம்!''

- சாயம் வெ.ராஜாராமன்



"வெறும் நாலு மார்க்குல ஃபெயிலாயிருக்கியே... உருப்படுவியாடா நீ?"

"வெறும் நாலாயிரம் ஓட்டுல தோத்திருக்கியே... நீ மட்டும் உருப்படுவியா?"

- சூரியன்



"தலைவரை எதுக்குக் கைது பண்றாங்க?"

"தேர்தல் கமிஷனோடு கூட்டணி வைக்கத் தூது விட்டாராம்!"

- அம்பை தேவா



"என்ன டாக்டர்! ஒரு கண்ணை ஆபரேஷன் பண்ணச் சொன்னா ரெண்டு கண்ணையும் பண்ணிட்டீங்க?"

"ஒரு கண்ணு பண்ணினா, இன்னொரு கண்ணு ஃப்ரீயாச்சே!"

- உஷா சாரதிடேச்சு




''இந்த டாக்டர் போலின்னு எப்படிச் சொல்றீங்க?''

''உடம்பு சரியா இல்லைன்னு சொன்னதுக்கு, 'யார் சொன்னது... உங்க உடம்பு நமீதா மாதிரி கும்முனு இருக்கு'ன்னு சொல்றாரே!''

- எஸ்.கே.எம்.பி. வெங்கட்



"நம்ம தலைவர் ரொம்ப ஓவராப் பேச ஆரம்பிச்சிட்டாரே!"

"எப்படிச் சொல்றே?"

"எங்கள் ஆட்சியில்தான் நடிகை மீனாவுக்குத் திருமணம் நிச்சயம் ஆனதுங்கிறாரே!"

- பா.ஜெயக்குமார்



''டார்லிங்! உங்களுக்கு ஒரு வேலை கிடைச்ச பின்னாடி, மனசு மாறி என்னை மறந்துட மாட்டீங்களே?''

''என்ன வேலை கிடைக்கும், எவ்வளவு சம்பளம் கிடைக்கும்னு எதுவுமே தெரியாம எப்படிம்மா சொல்றது?''

- வீ.விஷ்ணுகுமார்



''தலைவரே! கட்சிக்காக என் உயிரையும் நான் தருவேன்!''

''உன் அட்ரஸைத் தந்துட்டுப் போ... தேவைப்படறப்ப கூப்பிடுறேன்!''

- வீ.விஷ்ணுகுமார்



"தலைவரே, நாம போற பாதை சரியில்லை!"

"என்ன பண்றது... பணம் கொடுத்தாதான் ஓட்டு விழும்னு தெரிஞ்சுபோயிடுச்சே!"

"நான் அதைச் சொல்லலீங்கய்யா... எதிர்ல முட்டுச்சந்து, வண்டி போவாதுங்கய்யா!"

- வி.அங்கப்பன்



"இந்த ஊர்ல பத்து வருஷமா இருக்கேங்கிறீங்க. உங்களை என் கிளினிக்ல நான் பார்த்ததே இல்லியே!"

"அதனாலதான் டாக்டர் நான் இந்த ஊர்ல பத்து வருஷமா இருக்கேன்!"

- வி.அங்கப்பன்



"அத்தே... வெயில்ல நல்லா அலைஞ்சு திரிஞ்சு வந்திருப்பீங்க, போய் ஃப்ரெஷ்ஷா குளிச்சுட்டு வாங்க. நல்லா கொதிக்கக் கொதிக்க வெந்நீர் போட்டு வெச்சிருக்கேன்!"

ஜெ.மாணிக்கவாசகம்



“மன்னா! எதிரி மன்னன் தங்களை ஹைடெக் முறையில் அவமானப்படுத்துகிறான்!”

“எப்படி தளபதியாரே!”

“‘ஐயோ! அம்மா... என்னை விட்டுவிடு’ என்று போர்க்களத்தில் நீங்கள் கதறிய கதறலைத்தான் காலர் டியூனாக வைத்திருக்கிறான்!”

- சு.அருண் பிரகாஷ்



''நீங்க கடைசியா யாரையாவது பார்க்க ஆசைப்படறீங்களா?''
''ஆமாம்... ஒரு நல்ல டாக்டரைப் பார்க்கணும்!''

- பி.பாலாஜி கணேஷ்



"டான்ஸ் போட்டிக்கு வந்த ஆள் எதுவும் ஆடாம 'நானும் நயன்தாராவை லவ் பண்றேன்'னு சொல்றாரே?"

" 'உங்களில் யார் அடுத்த பிரபுதேவா' போட்டியைத் தப்பா புரிஞ்சுகிட்டாரு!"

- சி.பி.செந்தில்குமார்



''எங்க வீட்டு நாயைக் காணலை சார்!''
''அடையாளம் ஏதாவது சொல்ல முடியுமா?''
''என்னைப் பார்த்தா அது வாலாட்டும் சார்!''

- உஷா சாரதிடேச்சு



"என்னிடம் பணம் வாங்கிக்கொண்டு, எனக்கு ஓட்டுப் போடாத மகா ஜனங்களே! உண்மையிலேயே உங்களுக்கு ரோஷம் இருந்தால்... என்னிடம் கைநீட்டி வாங்கியப் பணத்தைத் திருப்பிக் கொடுங்கள் பார்க்கலாம்!"

- செல்வராஜா



"அமைச்சரே! நமது படைத் தளபதிகளைப் போருக்குத் தயாராகச் சொல்லுங்கள்!"

"இளைய தளபதி வேட்டைக்காரனிலும், புரட்சித் தளபதி தோரணையிலும், சின்னத் தளபதி கண்டேன் காதலிலும், வீரத் தளபதி செங்கோட்டை செல்வதிலும் பிஸியாக இருக்கிறார்கள் மன்னா!"



''கல்யாணம் ஆகாம எப்படிக் கர்ப்பம் ஆனீங்க. டாக்டர்கிட்டயும் வக்கீல்கிட்டயும் எதையும் மறைக்கக்கூடாது... சொல்லுங்க!''

''என் வக்கீல் இப்படிச் சொன்னதாலதான் இங்கே வரவேண்டியதாயிடுச்சு டாக்டர்!''

- ஷண்முகம்




"உன் கல்யாணத்துக்கு ஒருத்தரும் வரலையே ஏன்?"

"அதான் சொன்னேனே... எனக்கு ஒரு கஷ்டம்னா யாரும் வரமாட்டங்கன்னு!"

- சிக்ஸ்முகம்




"பத்து நிமிஷம் லேட்டா வந்திருந்தா பேஷன்ட்டைக் காப்பாத்தி இருக்கலாம்!"

"எப்படிச் சொல்றீங்க?"

"டாக்டர் வீட்டுக்குப் போயிருப்பார்!"

- அ.அப்துல்காதர்



"தலைவர் பகல் முழுக்கத் தொண்டர்களைச் சந்திப்பார்!"
"ராத்திரியில்..."
"குண்டர்களைச் சந்திப்பார்!"

- பிரியதர்ஷன்



"உன் ஊர் பெயர் என்ன?"

"திருத்துறைப்பூண்டி!"

"அதுக்கு இங்கிலீஷ்ல ஸ்பெல்லிங் சொல்லு!"

"இல்ல டீச்சர்... என் ஊர் தேனி!"

- பா.ஜெயக்குமார்



"என் புருஷன் கோர்ட் வாசலையே மிதிச்சது இல்லை!"
"அதை ஏன் வருத்தமாச் சொல்றே?"
"அவர் வக்கீலாச்சே!"

- அ.ரியாஸ்



"உன் அத்தை எதிர்ல வந்தா போற காரியம் உருப்படாதுனு ஏன் சொல்றே?"

"எல்லாம் 'ஆன்ட்டி' சென்டி மென்ட்தான்!"

- வெ.சீதாராமன்



"ஆபரேஷன்ல திடீர்னு சிக்கலாயிட்டா என்ன டாக்டர் பண்ணுவீங்க?"

"போர்த்தி மூடிடுவேன்!"

- ஜெ.மாணிக்கவாசகம்



"நான் சொன்னேன்ல இது மைனர் ஆபரேஷன்னு..."

"இருக்கட்டுமே... அதுக்காக இப்படியா பத்து வயசுப் பையன் கையில கத்தியைக் கொடுத்து ஆபரேஷன் பண்ணச் சொல்றது?"

- சொக்கம்பட்டி தேவதாசன்



"டாக்டர்! எங்க வீட்டுக்காரர் ராத்திரி தூக்கத்துல பண்ற கூத்து தாங்க முடியல!"

"தூக்கத்துல நடக்கற வியாதியா?"

"இல்ல டாக்டர், தூக்கத்துலயே எழுந்து சமைச்சுட்டு, என்னையும் எழுப்பி சாப்பிடச் சொல்றார்!"

- ஆர்.ராஜலட்சுமி



"இந்தக் காலத்துப் பசங்க கணக்குப் பாடத்தைக்கூட கவர்ச்சியா நடத்தச் சொல்லிக் கேட்குறாங்க!"

"எப்படி சார் முடியும்?"

'த்ரி'ஷா X 'த்ரி'ஷா = 'நயன்'தாரான் னுதான்!"

- ஷண்முகம்




"வூடு கட்டி அடிக்கிறதுக்கெல்லாம் லோன் தர முடியாதுப்பா!"

- அ.ரியாஸ்



''நம்ம தலைவர் ஜீன்ஸ், டி-ஷர்ட், கூலிங் கிளாஸ்ல ரொம்ப டிப்-டாப்பா வர்றாரே?''

''மூத்த அமைச்சர்களை வீட்டுக்கு அனுப்புறாங்களாமே!''

- அ.ரியாஸ்



“நான் இவ்வளவு நேரம் பாடம் எடுத்ததுல இருந்து என்ன தெரியுது?”


“ஈவினிங் டியூஷனுக்குப் போறது நல்லதுன்னு தெரியுது!”

- அ.அப்துல் காதர்



''இந்த மருந்தைக் குடிச்சா இருமல் நிக்குமா டாக்டர்?''
''மூச்சே நிக்கிறப்ப, இருமல் நிக்காதா என்ன?''

- ஷோபா கிரிதரன்



"டாக்டர், நீங்க கொடுத்த மருந்தைச் சாப்பிட்ட பிறகு பல்லெல்லாம் கொட்டிடுச்சி!"

"'பொக்க' விளைவா இருக்கும்!"

- பிரியதர்ஷன்



"அந்த நடிகை குடிக்கிற ஸீன்ல நடிக்க மாட்டாங்களாம்!"
"ஏன்?"
"நிஜமாவே குடிக்கிறேன்னு அடம் பிடிக்குறாங்க!"

- தஞ்சை அனார்கலி



"ஐ.டி. ஆபீஸ்ல வேலை பார்த்தவரை நம்ம ஹோட்டல்ல சூப்பர்வைஸரா போட்டது தப்பாப் போச்சு!"

"ஏன் என்ன ஆச்சு?"

"சாம்பார்ல உப்பு அதிகம் ஆயிட்டா என்ன பண்ணணும்னு கூகுள்ல தேடிக்கிட்டு இருக்காரு!"

- டி.பெருமாள்



''நான் தாகம் என்றுதானே சொன்னேன்... எதற்காகப் போருக்கு ஏற்பாடு செய்தீர் அமைச்சரே?''

''எதிரி மன்னன்தான் உங்களுக்குத் தண்ணிகாட்ட சரியான ஆள் மன்னா!''

- கொளக்குடி சரவணன்



"ரவுடிகளை ஒழிக்கப்போறதா புது ஐ.ஜி. சபதம் எடுத்திருக்காராம் தலைவரே!"

"அதனாலென்ன?"

"கட்சிக்கு அடுத்த தலைவர் யார்னு தொண்டர்களுக்குள்ள பந்தயம் ஆரம்பிச்சிடுச்சு!"

- கொளக்குடி சரவணன்



"அந்த ஸ்கூல்ல எது எதுக்குத்தான் ஃபீஸ் வாங்கறதுன்னு ஒரு வெவஸ்தையே இல்லாமப் போச்சு!"

"ஏன்?"

"கோ-எஜுகேஷன் ஃபீஸ்னு தனியா வசூல் பண்றாங்க!"

- ஷண்முகம்




"சார், வாங்க வாங்க! உடம்புக்கு என்ன?"

"பரவாயில்ல சார், வெளியே மழை பெய்யுது, விட்டதும் கிளம்பிடறேன்!"

- அ.அப்துல் காதர்



‘‘நீதான் எனக்கு மனைவியா வருவேனு என் ஸ்கூல் வாத்தியாருக்கு முன்னாடியே தெரிஞ்சிருக்கும் போல!’’

‘‘எப்படிச் சொல்றீங்க?’’

‘‘‘மாடு மேய்க்கத்தான் நீ லாயக்கு’னு அப்பவே அடிக்கடி சொல்வார்!’’

- ராஜபாளையம் பேச்சி



"ஆனாலும், தலைவர் ரொம்ப மோசம்னு சொல்றியே, ஏன்?"

"அவர் பையனோட ரேங்க் கார்டுல கையெழுத்துப் போடறதுக்கே நூறு ரூபா வாங்கிட்டார்னா பாரேன்!"

- சொக்கம்பட்டி தேவதாசன்




“ரயிலைக் கடத்திட்டாங்கன்னு ஏன் பொய்ப் புகார் கொடுத்தீங்க?”

“சரியான நேரத்துக்கு ரயில் கிளம்பிட்டதால தப்பாப் புரிஞ்சுக்கிட்டேன் சார்!”

- சிக்ஸ்முகம்



"உங்க பையன் கணக்குல எத்தனை மார்க்?"

"சென்ட்டம்! உங்க பையன்..?"

"தெண்டம்..!"

- என்.ஏ.பாலகிருஷ்ணன்




"கோவிச்சுக்காதப்பா... ரொம்பப் போரடிக்குதேன்னுதான்..."



"இன்னிக்கு உங்களை டிஸ்சார்ஜ் பண்ணப் போறோம். வெளியே போய் டாக்டரைப் பத்தி எதுவும் தப்பாப் பேசக் கூடாது!"

"ஏன் சிஸ்டர்?"

"தப்பாப் பேசினீங்கன்னா, 'இன்சல்டிங் ஃபீஸ்' வசூல் பண்ணுவோம்!"

- வந்தை ஜி.கே.நிதி



"ஆசையே துன்பத்துக்குக் காரணம்னு எப்போ நீ உணர்ந்தே?"

"நான் ஆசைப்பட்ட பொண்ணையே கல்யாணம் செஞ்சுக்கிட்டப்பதான்!"

- கொளக்குடி சரவணன்



"நம்ம பேட்டை ரவுடியைக் கட்சியில சேர்த்த கையோடு டாக்டர் பட்டம் கொடுத்தது தப்பாப்போச்சு!"

"ஏன், என்னாச்சு?"

"அவன் செஞ்ச கொலையை எல்லாம் ஆபரேஷன்னு சொல்லிட்டுத் திரியறான்!"

- எஸ்.ஏ.சரவணக்குமார்



"கிராமத்து சப்ஜெக்ட் படத்துல ஹீரோவுக்கு எதுக்கு எம்ப்ராய்டரி போட்ட கோவணம் குடுத்திருக்காங்க?"

"படத்தை மாறுபட்ட கோவணத்துல எடுத்திருக்காங்களாம்!"

- சாயம் வெ.ராஜாராமன்



“இந்த கோர்ட்டுல நீங்க சொல்ல விரும்பறதைத் தைரியமாச் சொல்லலாம்!”

“இருந்தாலும் பெட்ரோல், டீசல் விலையை இப்படி திடுதிடுப்புனு ஏத்தியிருக்க வேண்டாம் எஜமான்!”

- எஸ்.கோபாலன்



‘‘அந்தத் திமிர் பிடிச்ச பெயின்டர்கிட்டே பேரம் பேசாதீங்கன்னு சொன்னேனே... கேட்டீங்களா டாக்டர்?’’

‘‘ஏன்?’’

‘‘‘வரிசையாக அமரவும்’னு எழுதறதுக்குப் பதிலா ‘வரிசையாக அமரராகவும்’னு எழுதிட்டுப் போயிட்டான்!’’

- எஸ்.முகம்மது யூசுப்



"என்ன டாக்டர்... ஆபரேஷனைப் பாதியிலேயே விட்டுட்டுக் கிளம்பிட்டீங்க?"

"மீதியை போஸ்ட்மார்ட்டத்துல பார்த்துக்குவாங்க!"

- வைகை ஆறுமுகம்



"மாலா! ஒரே ஒரு முத்தம் கொடேன்!"

"சே... சே! முத்தமெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்!"

"அட லூஸு! எனக்குத்தான் கல்யாணம் ஆயிடுச்சே... சும்மா கொடு!"

- ஜி.கே.நிதி




"மாணவர்களே! இன்று நாம் ஆப்பிரிக்காவில் உள்ள காடுகளைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்!"

"மதியம் சாப்பாட்டுக்குள்ள திரும்பிடுவோமா சார்?"

- தென்றல் சண்முகசுந்தரம்



"இவன் ஜட்ஜோட மகன்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க!"

"ஒவ்வொரு பரீட்சையும் எழுதி முடிச்ச உடனே, பேனாவை டெஸ்க் மேலே ஓங்கிக் குத்தி உடைச்சுடுறானே!"

- வாணியம்பாடி ராஜ்குமார்



"அந்தக் கோயில் மண்டபத்துல ராத்திரி யாரும் தங்கமாட்டாங்களா... ஏன்?"

"அந்தக் கோயில் யானைக்குத் தூக்கத்தில் நடக்கிற வியாதியாம்!"

- எஸ்.பொருநை பாலு



"நம்ம தலைவர் எழுதின புத்தகம் அரை மணி நேரத்துல வித்துத் தீர்ந்துவிட்டதாம்!"

"அப்படி என்ன புத்தகம்?"

"இடைத்தேர்தலில் சிக்கனமாகச் செலவழித்து ஜெயிக்க ஆயிரம் வழிகள்!"

- புளியரை கணேசன்



''உங்களுக்கு ரத்தப் பரிசோதனை, எக்ஸ்-ரே பரிசோதனை, ஸ்கேன் பரிசோதனை எடுக்கணும்னு சொன்னதும், அந்த பேஷன்ட் எழுந்து ஓடறாரே, ஏன்?''

''சோதனை ஓட்டமா இருக்கும்!''

- வெ.சீதாராமன்



"கல்யாணம் ஆன புதுசுல உன் புருஷன் ரொம்ப கெடுபிடியா இருந்தாரே, இப்ப எப்படி இருக்கார்?"

"எடுபிடியா ஆயிட்டார்!"

- லாவண்யா



"டாக்டர்! நீங்க எனக்கு ஒரு காரியம் பண்ணணும்..."

"அதெல்லாம் உங்க பிள்ளைங்ககிட்ட சொல்லி பண்ணச் சொல்லுங்க!"

- வி.சாரதிடேச்சு



''ஆபரேஷன் செய்யப் போற சமயத்துல, டாக்டர்கிட்ட என்னய்யா சொல்லித் தொலைச்சே. கோபமா போறாரு!''

'''கத்தி எடுத்தவன் கத்தியாலதான் சாவான்'னு சொன்னேன்!''

- ஆர்.ராஜ்குமார்



''எனக்கு வெட்கம், மானம், சூடு, சொரணை இல்லையா என்று எதிர்க்கட்சித் தலைவர் என்னைப் பார்த்துக் கேட்கிறார். நான் அவரைக் கேட்கிறேன்... எனக்கு இருப்பது போல ஷுகர், ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரால், மூட்டுவலி, குடலிறக்கம், பார்வைக் கோளாறு எல்லாம் உங்களுக்கு இருக்கிறதா!''

- வி.சாரதிடேச்சு




"நிதியமைச்சர் ராணி முகர்ஜியை வன்மையாக..."
"தலைவரே! அது பிரணாப் முகர்ஜி!"

- அ.ரியாஸ்



"டாக்டர், கிட்னி ஃபெயிலியர் ஆயிட்டா என்னாகும்?"
"எங்களுக்கும் பிரயோஜனப்படாது!"

- டி.சேகர்



"டாக்டர்! எப்பவுமே என் மனைவி என்னைத் தூக்கியெறிஞ்சுதான் பேசுவா!"

"அதுக்காக ரத்தக்காயம் ஏற்படற அளவுக்கா தூக்கி வீசுவாங்க?"

- ஆர்.தங்கராஜ்



"எதிர்த்த வீட்டு ஆன்ட்டிக்கு முத்தம் கொடுத்தியே... என்ன சொன்னாங்க?"

"அப்படியே உங்கப்பன் புத்தின்னு சொன்னாங்க மம்மி!"

- ஷண்முகம்




''உங்க படத்தில் டைரக்டர் டச்னு எதைச் சொல்வீங்க?''

''ஷூட்டிங் முடிஞ்சப்ப ஹீரோயின் மூணு மாசம் கர்ப்பமா இருந்ததைத்தான்!''

- கொளக்குடி சரவணன்



"மெகா சீரியல் டைரக்டர் வீட்டுக் கொலுவுக்குப் போனது தப்பாப் போச்சு!"

"ஏன், என்னாச்சு?"

"பாடச் சொல்றதுக்குப் பதிலா அழச் சொல்றாரே!"

- வி.சாரதி டேச்சு



"தலைவா! நீங்க சொன்ன மாதிரியே அசிஸ்டென்ட் கமிஷனரைக் கொன்னுட்டோம்!"

"நான் எப்போ சொன்னேன்?"

"நீங்கதானே சொன்னீங்க, 'டென்ஷனா இருக்கு 'ஏ.சி'யைப் போடுங்க'ன்னு!"

- கவிதா



"தலைவரோட படுக்கைக்குப் பக்கத்துல எப்பவும் ஏன் சோடா பாட்டில் திறந்தே இருக்கு?"

"அவருக்குத் தூக்கத்துல எழுந்து பேசுற வியாதி இருக்கே!"

- சுப்புவேதையா சித்திரவேலு



"டாக்டர் உள்ளே உட்கார்ந்துகிட்டு சும்மா இருமிக்கிட்டே இருக்காரே, ஏன்?"

"அப்பதானே வெளியே இருக்குறவங்க 'டாக்டர் உள்ளே பேஷன்ட்டோட இருக்காரு'னு நினைச்சுப்பாங்க!"

- வி.சாரதி டேச்சு



"நம்ம டாக்டருக்கு விளையாட்டுன்னா ரொம்பப் பிடிக்கும்!"

"என்ன விளையாட்டு?"

"உயிரோடு விளையாடுறதுதான்!"

- பி.பாலாஜி கணேஷ்



''ப்ளூ கிராஸ்ல இருந்து வர்றோம். உங்க பெட் அனிமலை நீங்க சரியா கவனிக்கிறது இல்லைன்னு கம்ப்ளையின்ட் வந்திருக்குது மேடம்!''

''ஏங்க, கேக்குறாங்க இல்ல... சரியா கவனிச்சுக்கிறாங்கன்னு வாயைத் திறந்து சொல்ல வேண்டியதுதானே!''

- கே.சி.கோவிந்தராஜன்



''பசங்களா, நீங்க எல்லாம் நல்லா படிச்சு, நாட்டுக்கு நல்ல பேரு வாங்கித் தரணும்!''

''ஏன், 'இந்தியா'ங்கிற பேர் நல்லா இல்லையா டீச்சர்?''

- கவிதா



"பொய் சொல்லாமச் சொல்லுங்க, இன்னிக்கு ஆபீஸுக்குப் போகாம எங்கே போனீங்க?"

"ஆபீஸ்தான் போனேன்!"

"காலைல நான் உங்க செல்லுக்கு போன் பண்ணினா, 'தற்சமயம் பிஸியாக இருக்கிறார்'னு வந்ததே!"

- வி.சாரதிடேச்சு



"நம்ம டைரக்டர் ஏன் இப்படிச் சோர்ந்து போயிருக்கார்?"

"கதையே இல்லாம அவர் எடுத்த படத்தோட கதை என்னுதுன்னு ஒருத்தர் கேஸ் போட்டு இருக்காராம்!"

- டி.சேகர்



"ரொம்ப நேரமா உலக வரைபடத்துல என்ன தேடுறீங்க?"
"எல்லா நாடும் இருக்கு. கொடநாடு காணோமேய்யா!"

- சாந்தகுமார்



"டாக்டர்... என் மனைவி திடீர்னு பேச்சு மூச்சு இல்லாமக் கிடக்குறா!"

"நான் என்ன பண்ணணும்?

"மூச்சை மட்டும் வரவழைச்சா போதும்!"

- அதிரை புகாரி



"சாமியார் திடீர்னு மூடு அவுட்டாமே... ஏன்?"

"தங்களின் அடுத்த 'கெட்ட' நடவடிக்கை என்னன்னு நிருபர் கேட்டுத் தொலச்சிட்டாராம்!"

- பி.ஜி.பி.இசக்கி



"டாக்டர்... நம்ம ஆஸ்பத்திரிக்கு முதன்முதலா ஒரு பேஷன்ட் வர்றார்!"

"அவரை வலது கிட்னியை எடுத்துவெச்சு உள்ளே வரச் சொல்லுங்க!"

- க.கலைவாணன்



''ஒரே ஆபரேஷன்ல எப்படி டாக்டர் இருபது பேர் பிழைப்பாங்க?''

''என்னோடது கூட்டுக் குடும்பம்!''

- ஜெ.மாணிக்கவாசகம்



"அம்மா, தாயே! தர்மம் பண்ணுங்கம்மா. வாய் பேச முடியாத ஊமைம்மா!"

"பக்கத்து வீட்டுல போய் கேளுப்பா. எனக்கு ரெண்டு காதும் கேக்காது!"

- கருப்பம்புலம் சித்திரவேலு



"மருந்து பாட்டிலை ஏன் தடவிட்டு இருக்கே?"
"டாக்டர்தான் தலை வலிச்சா இதைத் தடவச் சொன்னார்!"

- எஸ்.மோகன்



"மே ஐ கம் இன்..."

- ஜெ.மாணிக்கவாசகம்




“எல்லா டாக்டர்களும் ஏன் நின்னுகிட்டே ஆபரேஷன் செய்றாங்க சொல்லு?”

“தெரியலையே!”

“தெய்வம் மட்டுமில்லை... டாக்டர்களும் நின்றுதான் கொல்வாங்க!”

- எஸ்.மோஹன்



''இன்றைய அரசியல் நிகழ்வுகள் சரித்திரப் பாடமானா எப்படி இருக்கும்?''

''அக்பர் கிணறு வெட்டினார், அசோகர் குளம் வெட்டினார் என்பதற்குப் பதிலா, அந்தத் தலைவர் அவரை வெட்டினார், இந்தத் தலைவர் இவரை வெட்டினார்னு படிக்க வேண்டி இருக்கும்!''

- வெ.சீதாராமன்



“கான்ஸ்டபிள்... யாருய்யா அந்த ஜோடி?”

“போன வருஷம் நம்ம ஸ்டேஷன்ல கல்யாணம் செஞ்சு வெச்சோமே அவங்கதான்!”

“இப்ப எதுக்கு வந்திருக்காங்க?”

“தலை தீபாவளி கொண்டாடவாம்!”

- சி.ரகுபதி



"ஏங்க, நான் கர்ப்பமா இருக்கேன்!"

"இதை சந்தோஷமாச் சொல்லாம, ஏன் பயந்துக்கிட்டே சொல்றே?"

"நான் காலேஜ்ல படிக்கிறப்ப எங்கப்பாகிட்ட இப்படிச் சொன்னதுக்கு அடி பின்னிட்டார்... அதான்!"

- மா.மாரி



"அவர் போலி டாக்டர்னு எப்படிச் சொல்றே?"

"'மனசு உடைஞ்சு போய் வந்திருக்கேன் டாக்டர்'னு சொன்னதுக்கு... 'மாவுக் கட்டு போட்டு சரி பண்ணிடலாம்'னு சொல்றாரே!"

- சொக்கம்பட்டி தேவதாசன்



"தலைவர்கள் வாழ்த்துல, இந்தத் தலைவர் மட்டும் நரகாசூரனை 'கயிதே, கஸ்மாலம், சாவுகிராக்கின்னு' திட்டி வாழ்த்தியிருக்கார். இதைப் போடணுமா, வேண்டாமான்னு நீங்கதான் சொல்லணும்!"



"கொலை வழக்கை உங்கக்கிட்டே ஒப்படைச்சோமே... என்ன கண்டுபிடிச்சீங்க?"

"கொலை செய்யப்பட்ட நபர் சம்பவம் நடக்கிறதுக்கு முன்னாடி உயிரோட இருந்திருக்கார் சார்!"

- சிக்ஸ்முகம்



"சிஸ்டர்... அந்த பேஷன்ட் ரொம்ப நேரமா என்னமோ எழுதிட்டு இருக்காரே... உயிலா!"

"ஜனாதிபதிக்குக் கருணை மனுவாம்!"

- நாகலட்சுமி கருணாநிதி



"என்ன சார்... செல்போன் வெடின்னு சொன்னீங்க. சத்தமே இல்லாம வெடிக்குது?"

"சைலன்ட் மோடுல இருந்திருக்கும்!"

- சி.பி.செந்தில்குமார்



"இந்த ஆபரேஷன் ரொம்ப கஷ்டமானதா டாக்டர்?"
"நோ... நோ. டெட் ஈஸி!"

- ஜக்கி



"சினிமா டைரக்டர் வெச்சிருக்கிற ஹோட்டல்ல காசில்லாம சாப்பிட்டது நல்லதாப்போச்சு!"

"ஏன்?"

"அரைச்ச மாவையே அரைக்கச் சொன்னார், ரொம்ப லேசா இருந்துச்சு!"

- ராஜபாளையம் பேச்சி



“டாக்டர்! பறவைக் காய்ச்சலுக்கும் பன்றிக் காய்ச்சலுக்கும் என்ன வித்தியாசம்?”

“ஃபீஸ்தான்!”

- ப்ரியதர்ஷினி



"பாப்கார்ன், கட்லெட், சிப்ஸ், என்ன சாப்பிடுறீங்க?"
"ஆபரேஷன் முடிஞ்சுடுச்சா சிஸ்டர்!"
"இல்லை, டாக்டர் இன்டர்வெல் விட்டிருக்கார்!"

- சிக்ஸ்முகம்



''உடம்பு பலவீனமா இருக்குதுனு டானிக் எழுதித் தந்தேனே.. ஏன் சாப்பிடலை?''

''மூடியைத் திறக்க முடியலையே டாக்டர்!''

- எம்.அசோக்ராஜா




"ஆஸ்பத்திரி பில் செட்டில் பண்ணினால்தான்..."

"பண்ணினாத்தான்..."

"பேஷன்ட் உயிரோட இருக்காரா இல்லையான்னு சொல்லுவாங்களாம்!"

- பி.பாலாஜி கணேஷ்



''அந்த அறிமுக ஹீரோயின் 'பிகினி'யில் நடிக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்க சார்!''

''பிகினிங்ல அப்படித்தான் சொல்லுவாங்க!''

- வீ.விஷ்ணுகுமார்

“கல்யாணத்துல எதுக்குங்க அட்சதை தூவுறதுக்குப் பதில் கோதுமை தூவுறாரு!”

“அவருக்கு ஷுகர்! அரிசியை கிட்டவே சேர்த்துக்கக் கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டாராம்!”

- பா.ஜெயக்குமார்

"பேஷன்ட் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே இறந்துட்டார்!"

"இருக்காது டாக்டர். பத்து நிமிஷம் முன்னாடிகூட நான் அவர்கிட்ட பேசிட்டு இருந்தேனே!"

"அதுசரி! நீங்கதானே பேசிட்டு இருந்தீங்க?"

- அ.ஜெயேந்திரன்

“தடவித் தடவிப் படிக்கிற என் தாத்தாவுக்கு ஆனாலும் கொழுப்பு ஜாஸ்தி!”

“ஏன்டா?”

“ஏதோ சமீரா ரொட்டியாமே... பால்ல தோய்ச்சு சாப்பிட அதான் வேணும்னு அடம் பிடிக்கிறாரு!”

- வே.சதா



"அந்த டாக்டர் எதுக்கு சித்தாளை வேலைக்கு வெச்சிருக்காரு?"
"கிட்னியில கல் இருந்தா அள்ளிப் போடுறதுக்காம்!"

- வி.சாரதிடேச்சு

"தலைவர் ஏன் ரொம்ப கோபமா இருக்காரு?"

"ஆள் உயர மாலை போடறதாச் சொன்னாங்களாம். ஆனா, 'மாலையைப் போட்ட பிறகும் நான் உயராம, குள்ளமாவே இருக்கேன்' அப்படினு தலைவர் ஆத்திரமாயிட்டாராம்!"

- ஏ.எஸ்.யோகானந்தம்

''பிறந்த நாளும் அதுவுமா நம்ம தலைவர் ஏன் ரொம்ப டென்ஷனா இருக்கார்?''

''எவனோ, 'வாழ்த்த வயது இல்லை. வணங்க மனசும் இல்லை'னு பேசிட்டானாம்!''

- கே.சி.கோவிந்தராஜன்



"உங்களுக்கு என்ன செய்யுது?"

"இப்பதான் வேற ஹாஸ்பிட்டல்ல இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வர்றேன். என் கிட்னி ரெண்டும் பத்திரமா இருக்கான்னு செக் பண்ணணும் டாக்டர்!"

- கொளக்குடி சரவணன்



"பக்கத்து ஊர் கிணற்றில் பிணம் மிதக்குதாமே, போய் விசாரிச்சீங்களா?"

"விசாரிச்சேன் சார், பிணம் பேச மாட்டேங்குது!"

- தமிழ்நாயகி

“நம்ம ரெண்டு பேருக்குள்ள ஒரு போட்டி வெச்சுக்கலாமா, டியர்!”

“என்ன போட்டி?”

“யார் முதல்ல கல்யாணம் பண்ணிக்கிறதுனு!”

- தஞ்சை அனார்கலி

“இந்த ஆட்சியைப் பற்றி இன்னும் மோசமாகப் பேச முடியும். ஆனால், அடுத்த பொதுத் தேர்தலின்போது இவர்களோடு கூட்டணி வைக்க வேண்டிய நிலையில் இருப்பதால், இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன்!”

- நாகலட்சுமி கருணாநிதி

"அப்பா, 'படிக்காதவன்' பார்க்க தியேட்டருக்குப் போறேன். 50 ரூபாய் கொடுங்க!"

"நம்ம வீட்டுக் கண்ணாடியில பாரு, போதும்!"

- எஸ்.லக்ஷ்மி




"ஆனாலும் நம்ம டாக்டர் ரொம்ப மோசம்!"

"ஏன் அப்படிச் சொல்றே?"

"'ஆபரேஷன் தியேட்டருக்குள் காணாமல்போகும் மனித உறுப்புகளுக்கு நிர்வாகம் பொறுப்பல்ல'னு எழுதிப் போட்டிருக்காரே!"

- பெ.பாண்டியன்

“முன்பெல்லாம் எதிரி நாட்டு மன்னன், என் மீது ‘ஈட்டியை எறிவேன்’ என்றுதான் ஓலை அனுப்புவான்!”

“இப்போ..?”

“ஷூவை எறிவானாம்!”

- டி.ஜெய்சிங்

''ஆயிரந்தான் இருந்தாலும் இதயம்னு ஒண்ணு இருக்குங்கிறதை என் மாமியார் நிரூபிச்சுட்டாங்க!''

''எப்படி?''

''நெஞ்சுவலின்னு படுத்துட்டாங்களே!''

- ஒரியூர் கே.சேகர்

‘‘நீங்க நம்ம தெரு ராப்பிச்சைக்கு ரொம்பதான் இடம் கொடுத்துட்டீங்க!’’

‘‘ஏன்... என்னாச்சு?’’

‘‘யார் வீட்டு சாம்பாரையோ கொண்டுவந்து கொடுத்து, நம்ம வீட்டு ஃபிரிட்ஜ்ல வெக்கச் சொல்றான். நாளைக்கு வாங்கிக்கிறானாம்!’’

- வி.சாரதிடேச்சு

“எழுத்தாளரை மொய் எழுத உட்காரவெச்சது ரொம்பத் தப்பாப் போச்சு!”

“ஏன், என்னாச்சு?”

“நோட்டின் கடைசியில ‘பெயர்களும் தொகைகளும் கற்பனையே’னு எழுதிட்டாராம்!”

- போளூர் சி.ரகுபதி

"மரத்துக்கெல்லாம் த்ரிஷா, நமீதா, நயன்தாரான்னு தலைவர் பேர் வைக்கிறாரே, என்ன விஷயம்?"

"அப்பதான் மரத்தை வெட்ட எவனுக்கும் மனசு வராதாம்!"

- க.கலைவாணன்

"நர்ஸம்மா! டாக்டர் இந்த மாத்திரையை ஆயுசு பூரா சாப்பிடச் சொன்னார். நீங்க ஆறு மாசம் சாப்பிட்டாப் போதும்கிறீங்களே?"

"ரெண்டும் ஒண்ணுதாங்க!"

- கே.தண்டபாணி



“என் கை ரொம்ப உதறுது. அதுக்கு என்ன பண்றது டாக்டர்?”

“என் பக்கத்துல உட்கார்ந்து தர்மா மீட்டரை அப்பப்ப உதறிக் கொடுங்க!”

- வி.சாரதிடேச்சு



"ஜெயில்ல ரெய்டுக்கு வந்த அதிகாரிகள் ஏன் திகைச்சுப் போய் நிக்கிறாங்க!"

"ஜெயில்ல ஒரு கைதிகிட்ட லேண்ட் லைன் போனே இருந்ததாம்!"

- எஸ்.பி.வளர்மதி


விகடன் பிரசுரம்
விகடன் ஜோக்ஸ் 2007
விகடன் ஜோக்ஸ் 2008
நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

Printed Books

# விகடன் ஜோக்ஸ் 300




விகடன் பிரசுரம்

**VIKATAN JOKES 300**

**Rs. 85**

ISBN 978-81-8476-262-4

9788184762624